**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 66/2017**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.09.2025 | கணவர் பெயர்: | ஜெயராமன் |
| பெயர்: | அமிர்தம்<br>(PW– 2 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி டவுன் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 59/2025 |

**<u>2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : 04.09.2025</u>**
**(ஆரம்பித்த நேரம்– 12.35)**

1. வா.சா.ஆ.5 ஆவணமான நில சீர்திருத்த இணை ஆணையரால் வழங்கப்பட்ட தீர்வுச் சான்றில் என்ன சர்வே எண் உள்ளது என்றால் 16, 21/1. அதன் விஸ்தீரணம் என்னவென்றால் புல எண் 16ல் 3 ஏக்கர் 40 செண்ட், 21/1ல் 0.50 செண்ட். வா.சா.ஆ.7 ஆவணத்திலும் புல எண் 16ல் 3 ஏக்கர் 40 செண்ட், 21/1ல் 0.50 செண்ட் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் புல எண் 16/2ல் 3 ஏக்கர் 41 செண்ட் என்றும், புல எண் 21/9ல் 51 செண்ட்டும் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக புல எண் 21/1ஐ உட்பிரிவு செய்தால் 21/1A, 21/1B, 21/1C என்ற வரிசையில் தான் பிரிப்பார்கள் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ல் புல எண் 21/9 என்று குறிப்பிட்டுள்ளது செல்லாது என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ல் புல எண் 16ல் 3 ஏக்கர் 40 செண்ட் தான் என்றிருக்கும்போது வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் 16ல் 3 ஏக்கர் 41 செண்ட் என குறிப்பிட்டு விஸ்தீரண வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

அதேபோல் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ல் புல எண் 21/1ல் 50 செண்ட் என்றிருக்கும்போது வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் 21/9ல் 51 செண்ட் என குறிப்பிட்டு விஸ்தீரண வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட சொத்தை தவிர வேறு எந்த சொத்துக்களும் கிடையாது என்றால் சரிதான். விஸ்தீரண வேறுபாடு உள்ளதால் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வாய்தா ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாய்தா ரசீதுகள் 2015ம் ஆண்டிற்கு முன்னர் உள்ளவற்றை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது கணவருக்குதான் அதுபற்றி தெரியும், எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாததாக இருக்கும்போது அதனை அனுசரித்து ஏற்பட்ட வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களும் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 17.08.1977 தேதியிட்ட ஒப்பந்தத்தில் எனது மாமனார் கையெழுத்து உள்ளதா என்றால் வெங்கடேசன் என்று பெயர் மட்டும் உள்ளது, அவருடைய கையெழுத்து இல்லை. அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது). பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி வா.சா.ஆ.5, வா.சா.ஆ.7 ல் உள்ளதுபோலவே சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் உள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.1 ன்படி தாவா சொத்துக்கள் கல்யாணி அம்மாளின் அனுபவத்தில் இருந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் கல்யாணிக்கு பிறகு சுப்ரமணியன் அனுபவத்தில் இருந்து வந்து அதன்பிறகு 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வந்து தற்போது 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் 3, 4, 5 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 17.08.1977க்கு பிறகு எந்த காலத்திலும் வெங்கடேசன் அனுபவத்திலேயோ அவரது வாரிசுதாரர்கள் அனுபவத்திலேயோ இல்லை

என்றால் சரியல்ல.

5. தாவா சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையோ அனுபவமோ இல்லாததால் தாவாப்படி பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் அனுபவத்தில் இல்லாதபோது 1, 2 பிரதிவாதிகள்இடையூறு செய்தார்கள் என்று கூறுவது சரியல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.04)**